(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 249.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2018 மார்ச்சு 23 வெள்ளிக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

692/ '16

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பித்தளை சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளவர்கள் தற்போது அக்கைத்தொழிலிலிருந்து விலகிச் செல்கின்றனர் என்பதையும்;

(ii) மூலப்பொருள் மற்றும் சந்தை தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) இது இந் நாட்டுக்கு பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரக் கூடிய ஒரு கைத்தொழிலாகுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பித்தளை சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றுமதி வருமானம் யாதென்பதையும்;

(iii) ஏற்றுமதி செய்யப்படுவதில்லையெனில், ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நாட்டினுள் பித்தளை சார்ந்த கைத்தொழிலுக்கு தேவையான சந்தையை விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1229/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி இடங்களில் தற்போது பேணல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற இடங்கள் யாவை;

(iii) இதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு;

(iv) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட தொல்பொருளியல் ரீதியில் பெறுமதிமிக்க இடங்கள் யாவை;

(v) மேற்படி அழிவுகள் பற்றிய மதிப்பீடொன்று செய்யப்பட்டிருப்பின், மதிப்பீட்டுப் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு;

(vi) மேற்படி அழிவுகள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(vii) மேற்படி அனைத்தினதும் முழுமையானதோர் அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1425/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 200 ஆம் இலக்க பிரேரணைக்கு அமைய, ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களை நவீனமயப் படுத்துவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் யாவையென்பதையும்;

(ii) எமது நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களின் முன்னேற்ற நிலைமை யாதென்பதையும்;

(iii) புதிய ஏற்றுமதி தயாரிப்பு வலயங்களை ஆரம்பிப்பதற்கு இலங்கை முதலீட்டுச் சபை தலையிட்டுள்ளதா என்பதையும்;

(iv) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை இலங்கை முதலீட்டுச் சபையின் செயலாற்றுகை யாதென்பதையும்;

(v) இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் யார் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1665/ '17

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படும் பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) ஊவா மாகாணத்தின் தற்போதைய முதலமைச்சர் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் மேற்படி பாடசாலைகளுக்கு மாகாண சபையின் நிதி ஏற்பாட்டில் வழங்கப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) கட்டடங்கள் வழங்கப்பட்ட பாடசாலைகளின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) குறித்த நிர்மாணிப்புகள் வழங்கப்பட்ட ஆட்களினதும் கம்பனிகளினதும் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நிர்மாணிப்புகளுக்காக மாகாண சபை செலவிட்டுள்ள பணத்தொகை தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

2005/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீதி அமைச்சரின் அமைச்சு அலுவலகங்களின் முகவரிகள் யாவை என்பதையும்;

(ii) அந்த அலுவலகங்களுக்காக வாடகை குத்தகை செலுத்தப்படின் அந்த மாதாந்த வாடகை/ குத்தகை தொகை எவ்வளவென்பதையும்;

(iii) 2015 - 2017 ஆம் ஆண்டு வரை செலுத்தப்பட்டுள்ள மொத்த வாடகை/ குத்தகைத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அமைச்சரின் பிரத்தியேக பதவியணியின் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த பிரத்தியேக பதவியணிக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அமைச்சருக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

2112/ '17

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'ஆயிரம் பாலங்களை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டம்' என்பதன் கீழ் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள ஊற்றுப்புலம், வள்ளுவர்பண்ணை கிராமங்களை நோக்கிச் செல்கின்ற பிரதான வீதியில் அமைந்துள்ள பாலத்தின் நிர்மாணப் பணிகள் 2016 ஆகஸ்ட் மாதம் 25 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்;

(ii) இதன் ஒப்பந்தகாலம் 2017 மே மாதம் 21 ஆந் திகதி நிறைவடைந்ததென்பதையும்;

(iii) எனினும் மேற்படி பாலத்தின் நிர்மாணப்பணிகள் இற்றைவரை நிறைவு செய்யப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கான ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில் மேற்படி நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2136/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்கு உயிரியல் பாடத் துறையில் அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலிருந்து தோற்றியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையில், பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் எவ்வளவென்பதையும்;

(iii) மருத்துவ பீடத்திற்கான தகைமையை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் எவ்வளவென்பதையும்;

(iv) மருத்துவ பீடத்திற்கான தகைமையை பெற்றுள்ள மாணவன் அல்லது மாணவியின் ஆகக்குறைந்த பெறுபேறு, Z பெறுமதி, கல்வி கற்ற பாடசாலை மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மருத்துவ பீடம் யாதென்பதையும்;

ஒவ்வொரு மாவட்டத்தின்படி தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

2152/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய வீதிகளின் கிலோமீற்றர் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கும் அமைய வெவ்வேறாக எவ்வளவு;

(ii) அந்த எண்ணிக்கை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தரப்படுத்தல்களுக்கமைய வெவ்வேறாக எவ்வளவு;

(iii) 2013, 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் வடமேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய புத்தளம் மாவட்டத்தில் காபற் இடப்பட்ட வீதிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவு;

(iv) வடமேல் மாகாணசபைக்குரிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் பராமரிப்பதற்கும் நிதி ஏற்பாடுகளை வழங்கும் மூலங்கள் யாவை;

(v) 2013, 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மேற்படி மூலங்களின் கீழ் புத்தளம் மாவட்டத்தில், மாகாண வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு மூலத்துக்கும் அமைய வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2183/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015.09.01 ஆந் திகதி தொடக்கம் 2017.07.31 ஆம் திகதி வரை சனாதிபதி, பிரதம அமைச்சர், சபாநாயகர் மற்றும் அமைச்சர்களுடன் மேற்கொண்ட வெளிநாட்டு சுற்றுப்பயணங்களை உள்ளிட்டதாக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் மேற்கொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டு சுற்றுப்பயணங்களின் எண்ணிக்கையை இறங்குவரிசைக் கிரமத்திற்கேற்ப அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

2293/ '17

கௌரவ ஹேஷான் விதானகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்ரகமுவ மாகாணத்தின் கீழ் நிருவகிக்கப்படும் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்தப் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) சப்ரகமுவ மாகாணசபையின் தற்போதைய முதலமைச்சர் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டதன் பின்னர் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி பாடசாலைகளின் பெயர்கள், தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாது என்பதையும்;

(v) சப்ரகமுவ மாகாண சபையின் தற்போதைய முதலமைச்சர் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்ட பின்னர் மாவட்டத்தில் மூடப்பட்ட பாடசாலைகள் உள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்தப் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(vii) அவ்வாறு மூடப்பட்ட பாடசாலைகளின் வளங்களிலிருந்து பயன் பெறுவதற்காக அமைச்சு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

2325/ '17

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாணசபைக்குச் சொந்தமான மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசன திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நீர்ப்பாசன திட்டங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்திலிருந்தும் பயன்பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்தின் மூலமும் பயிர்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற காணிகளின் ஏக்கர் அளவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை மத்திய மாகாணசபையினால் மாத்தளை மாவட்டத்தில் நீர்ப்பாசன அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப் பட்டுள்ள பணத்தொகை வருடவாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

2340/ '17

கௌரவ ரீ. ரஞ்ஜித் த சொய்சா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் தற்போதைய தலைவரின் பெயர் யாதென்பதையும்;

(ii) அந்தப் பதவிக்குரிய கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) தற்போதைய தலைவர் அப்பதவிக்குரிய கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக வேறு தொழில்சார் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனின், அவை யாவை என்பதையும்;

(v) வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(vii) தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினர் பெறுகின்ற சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் தனித்தனியாக யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

2369/ '17

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சர் சரத் பொன்சேகா பீல்ட் மார்ஷல் என்ற வகையில் தற்பொழுதும் இலங்கை இராணுவத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) இவர் பங்குபற்றக்கூடிய இராணுவ செயற்பாட்டு நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இவர் இராணுவ சீருடையில் பங்கேற்கக்கூடிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இராணுவ நடவடிக்கைகளின்போது இவருக்குக் கிடைக்கின்ற அல்லது கிடைக்கக்கூடிய அதிகாரங்கள் யாவை என்பதையும்;

(v) இராணுவ அலுவலர் என்ற வகையில் இவர் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க முடியுமா என்பதையும்;

(vi) இராணுவ அலுவலராக இருக்கின்ற நிலையில் இவர் அமைச்சர் பதவியை வகிக்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

2397/ '17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை குருநாகல் மாவட்டத்தில் பதிவாகிய தலசீமியா நோயாளிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நோயாளிகள் பதிவாகிய பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை;

(iii) வடமேல் மாகாணத்தில் தலசீமியா நோயாளிகளுக்கு அவசியமான சிகிச்சைகள் அளிக்கப்படுகின்ற வைத்தியசாலைகள் யாவை;

(iv) மேற்படி நோய்க்கு அவசியமான சிகிச்சை வசதிகளை ஏனைய வைத்தியசாலை களுக்கும் வழங்க அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

(v) இந்த நோயாளிகளுக்கான இரையானவர்களுக்கான சத்திரசிகிச்சைக் கூடமொன்றும் மரபணு வங்கியொன்றும் குருநாகல் மாவட்டத்தில் உள்ளதா;

(vi) இந்த நோயாளிகளுக்கு அவசியமான சிகிச்சைகளையும் மருத்துவ வசதிகளையும் வழங்க அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

2463/ '17

கௌரவ இஷாக் ரஹுமான்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாவாவியிலிருந்து திசாவாவி வரை தண்ணீரை கொண்டு செல்லும் யோதஎல கால்வாய்க்கட்டுடன் இணைந்து காணப்படும் வீதி மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு சொந்தமானது என்பதையும்;

(ii) இந்த வீதியை 6 கிராமங்களைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் பயன்படுத்துவதோடு, குறித்த வீதி சுமார் 30 வருட காலமாக புனரமைக்கப்படாததன் காரணமாக மிகவும் சீர்குலைந்த நிலையில் காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த வீதி இதுவரை புனரமைக்கப்படாததற்கான காரணம் யாது என்பதையும்;

(ii) இந்த வீதி புனரமைக்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கான சம்பளம் மற்றும் படிகளில் திருத்தம் மேற்கொள்ளல் தொடர்பான அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— பத்தொன்பதாவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் ஊடாக திருத்தப் பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளங்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றமையினாலும்;

ஜனாதிபதியினால் 2018.02.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கான 2018.02.20 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளங்கள் மற்றும் படிகளை 2018.01.01 ஆம் திகதி முதல் கீழ் குறிப்பிடப்படும் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமையினாலும்:—

(அ) 3/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கான சம்பளங்கள் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு இணைப்பு 1 ஆக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 2018.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தியமைத்தல் மற்றும் சம்பள மாற்றத்தை படிப்படியாக மேற்கொள்ளல் எனும் அடிப்படையில் மேற்கொள்வதற்கும்;

(ஆ) இதுவரை சம்பளத்தில் 25% எனும் அடிப்படையில் செலுத்தப்பட்ட ஓய்வூதியத்துடனான படியை 2018.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 50% வரை அதிகரித்தலும் அந்தப் படியை புதிய சம்பளத்திற்கமைய பெற்றுக்கொள்ளப்படும் சம்பளப் படிநிலையின் அடிப்படையில் கணக்கிடுவதற்கும்;

(இ) மாதாந்தம் ரூபா 15,000/- எனும் வகையில் செலுத்தப்பட்ட ஓய்வூதியமற்ற விசேட படிக்குப் பதிலாக மாதாந்தம் ரூபா 150,000/- ஓய்வூதியத்திற்கு கணக்கிடப்படும் தொழில்சார் படியை செலுத்துவதற்கும்;

அதன் பிரகாரம், இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியலமைப்பின் 108(1) உறுப்புரையின் பிரகாரம் பிரதம நீதியரசர் மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் சம்பளங்கள் மற்றும் படிகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் திருத்தியமைக்கப்படுமாகவென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

**இணைப்பு 1**

**கௌரவ பிரதம நீதியரசர் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்காக 2018.01.01 ஆம் திகதியிலிருந்து ஏற்புடையதாகக் கொள்ளவேண்டிய சம்பள அளவுத் திட்டங்கள்**

| சேவை வகுதி | | | மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் | பிரதம நீதியரசர் |
|---|---|---|---|---|---|
| Service Category | | | Appeal Court Judges | Puisne /President CA | Chief Justice |
| சம்பளக் குறியீட்டு இலக்கம் | | | ஜே.எஸ் 3-2016 | ஜே.எஸ் 4-2016 | ஜே.எஸ் 5-2016 |
| Salary Code | | | JS 3-2016 | JS 4-2016 | JS 5-2016 |
| 1 | 2 | 3 | 4 | 4 | 4 |
| | | | 6,750 | 7,000 | 7,500 |
| | | | 5 | 5 | 5 |
| | | | | | |
| | | | | | |
| 1 | | | 135,000 | 140,000 | 150,000 |
| 2 | | | 141,750 | 147,000 | 157,500 |
| 3 | | | 148,500 | 154,000 | 165,000 |
| 4 | | | 155,250 | 161,000 | 172,500 |
| 5 | | | 162,000 | 168,000 | 180,000 |
| 6 | | | 168,750 | 175,000 | 187,500 |

- இதுவரை சம்பளத்திலிருந்து நூற்றுக்கு 25 வீதமாகச் செலுத்தப்பட்ட ஓய்வுச் சம்பளத்துடன் கூடிய படியை 2018.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு நூற்றுக்கு 50 வீதமாகி அதிகரித்தலும், அந்தப் படியை புதிய சம்பளத்திற்கமைய பெறப்படும் சம்பளப் படிநிலையின் அடிப்படையில் கணிப்பீடு செய்தலும்.
- மாதமொன்றுக்கு 15,000/- ரூபா வீதம் செலுத்தப்பட்ட ஓய்வுச் சம்பளமற்ற விசேட படிக்குப் பதிலாக 150,000/ ரூபாவான ஓய்வுச் சம்பளத்திற்குக் கணக்கெடுக்கப்படும் தொழில்சார் படியொன்றைச் செலுத்துதல்.

* 2.

தீவிரப் பொறுப்பு முகாமை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1 ),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 09 ஆம் திகதிய 2044/32 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2 ),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 15 ஆம் திகதிய 2045/32 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3 ) ,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 15 ஆம் திகதிய 2045/33 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4 ) ,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 22 ஆம் திகதிய 2046/14 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5 ) ,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 28 ஆம் திகதிய 2047/25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 9.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மாகாண சபைகளின் தேர்தல் தொகுதி எல்லைகளை நிர்ணயிப்பதற்கான குழுவின் அறிக்கை,— 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 3அ. (11) ஆம் பிரிவின் பிரகாரம் எல்லை நிர்ணயக் குழுவினால் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு 2018.03.06 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமான அக்குழுவின் அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புச் சபையின் விதப்புரைக்கமைய 2015.11.27 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாதலாலும்;

சனாதிபதியவர்களினால் 2017.11.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கான 2017.12.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு பின்வருமாறு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்:—

(அ) 2015.11.27 ஆம் திகதி முதல் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கமைய SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் 08 ஆவது படிநிலையில் இருத்தி சம்பளத்தைச் செலுத்தல் மற்றும் பதவிக்குரித்தான ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும்;

(ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இற்கமைய 2016.01.01 ஆம் திகதி முதல் சம்பளத்தை மாற்றியமைக்கும்போது SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் அச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளத்தை மாற்றியமைத்துச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) அச்சம்பள அளவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வருடாந்த சம்பள ஏற்றத்தைச் செலுத்துவதற்கும்.

அதற்கேற்ப, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* 15.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— ஹைட்ரோபுளோரொகாபனை (Hydroflurocarbons – HFC) கட்டங் கட்டமாக குறைத்தல் சம்பந்தமாக மொன்ட்ரியெல் கூட்டமைப்பு மேற்கொண்ட கிகாலி திருத்தத்திற்கு இலங்கை இணங்கிச் செயற்படல் தொடர்பான பிரேரணை நிறைவேற்றம்,— பூகோள வெப்பமடைதலைக் குறைப்பதற்காக மொன்ட்ரியல் அமைப்பினால் 1990 இல் இலண்டன் திருத்தம், 1992 கோபன்ஹேகன் திருத்தம், 1997 மொன்ட்ரியல் திருத்தம், 1999 பீஜிங் திருத்தம் என பல்வேறு இலக்குகளை அடைந்துகொள்வதற்காக நான்கு சந்தர்ப்பங்களில் திருத்தங்கள் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கை உரிய காலப் பகுதிகளில் அந்தத் திருத்தங்களுக்கு இணங்கிச் செயற்பட்டுள்ளதாலும்;

2016 ஆம் ஆண்டின் திருத்தமாக கிகாலி திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், அதனூடாக 2050 ஆண்டாகும்போது காபனீரொட்சைட் வாயு 100 பில்லியன் தொன்னுக்கு சமமான பூகோள வெப்பமடைதலுக்கு பங்களிப்புச் செலுத்தும் குளிர்பதனப் பொருட்களை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கான வாய்ப்புக் கிடைப்பதனால் பூகோள வெப்பத்தை 0.5 பாகை செல்சியஸால் அதிகரிப்பதனைக் தடுப்பதற்கான வாய்ப்பு உருவாகின்றமையினாலும்;

அரசியலமைப்பின் 33(2) (ஏ) இன் கீழ் அரசியலமைப்பின் அல்லது வேறு ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்திற்கு அல்லது ஏற்பாடுகளுக்கு முரண்படாத சர்வதேச சட்டம், பழக்க வழக்கங்கள் அல்லது பயன்பாட்டிற்கமைய நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் கிடைத்துள்ளதனால் கிகாலி திருத்தத்திற்கு இணக்கம் தெரிவித்தல் ஜனாதிபதியின் தனிச் சிறப்பு அதிகாரத்திற்குட்பட்ட விடயமாகுமென்பதாலும்;

அரசியலமைப்பின் 33அ உறுப்புரையின் கீழ் பொது மக்கள் பாதுகாப்பு சம்பந்தமாக அக்காலப் பகுதியில் செயல்வலுவிலிருந்த சட்டம் உட்பட ஏதேனும் எழுத்து மூல சட்டத்தின் கீழ் சுயாதீன அதிகாரங்கள், அலுவல்கள் மற்றும் பொறுப்புக்களை உரிய பிரகாரம் செயற்படுத்தல் மற்றும் உரிய பிரகாரம் நிறைவேற்றுதல் சம்பந்தமாக ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறல் வேண்டுமென்பதாலும்;

2017 செப்டெம்பர் 29 ஆம் திகதி சனாதிபதி அவர்கள் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் என்ற ரீதியில் சமர்ப்பித்த அமைச்சரவை நிருபம் தொடர்பாக எடுக்கப்பட்ட 2017 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய மொன்ட்ரியல் அமைப்பின் புதிய திருத்தமான கிகாலி திருத்தத்திற்கு இணங்கிச் செயற்படுவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளமையினாலும்;

அதன் பிரகாரம், அரசியலமைப்பின் 33அ உறுப்புரைக்கு இணங்கி சனாதிபதி அவர்களின் பிரேரணையொன்றாக ஹைட்ரோபுளோரொகாபனை கட்டங் கட்டமாக குறைத்தல் சம்பந்தமாக மொன்ட்ரியல் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட கிகாலி திருத்தம் தொடர்பில் இலங்கை இணங்கிச் செயற்படுவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

* 16.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

21.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

23.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.